தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 22, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 மே 5, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

வருவாய் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவரே செயலாற்றும் திறனுடையவர்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள் - விடைகள், வினா எண் 381, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

381—

பாலம் கட்டுதல்

***18079— திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியிலிருந்து வடசென்னை அனல் மின் நிலையத்தை இணைக்கும் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 மே 5

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அமைந்துள்ள எண்ணூர், கத்திவாக்கம் நகராட்சிப் பகுதிக்கு உட்பட்ட இடத்தில் வடசென்னை அனல்மின் நிலையம் உள்ளது. எண்ணூர் துறைமுகத்திற்கு ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களை கனரக வாகனங்கள் மூலமாக சென்னையிலிருந்து, திருவொற்றியூர் வழியாக, பொன்னேரி நெடுஞ்சாலை வழியாக துறைமுகத்தினையும், அனல்மின் நிலையத்தையும் அடைவதற்கு குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகின்றது. இதனால் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஏற்படும் செலவினங்கள் பல கோடி ரூபாய்களாக ஆகின்ற நிலைமையைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒத்துழைப்போடு எண்ணூரில் உள்ள பக்கிங்காம் கால்வாயின் மேல் இணைப்புப் பாலம் ஒன்றை அமைத்துத் தருவதன் மூலமாக வடசென்னை அனல் மின் நிலையம் மற்றும் துறைமுகத்தை அடைவதற்கு—எண்ணூர் பகுதியிலிருந்து வடசென்னை துறைமுகம் அடைவதற்கு—நேரம் சுமார் 10 நிமிடங்கள் ஆகும்; பயண நேரம் குறைவதுடன் அரசுக்கு ஏற்படும் அதிகப்படியான செலவினங்களும், எரிபொருள் சிக்கனமும் வெகுவாகக் குறையும். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தினை மாண்புமிகு எங்கள் முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஒப்புதலோடு தாயன்புமிக்க அம்மாவின் ஆசியோடு மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணூர் பகுதியில் இருந்து

2003 மே 5]

வடசென்னை அனல் மின் நிலையத்தை இணைக்கும் பாலம் அமைத்தால் சுமார் 16 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்து அனல் மின் நிலையத்தை அடைய வேண்டிய சூழ்நிலை தவிர்க்கப்படும். மேலும், அமைய உள்ள பாலத்தின் நீளம் 420 மீட்டர் மற்றும் அதன் அணுகு சாலையின் நீளம் 120 மீட்டர் இரு பக்கமும். இப்பாலம் கட்டத் தோராயமாக ரூபாய் 60 கோடி செலவாகும். இப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. அரசின் நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய சீரிய முயற்சியால் சாலைகளை மேம்படுத்துவதற்காக 2000 கோடி ரூபாய் உலக வங்கி தருவதற்கு அனுமதித்து இருக்கிறது என்கின்ற செய்தியை நாங்கள் செய்தித் தாள்களிலே பார்த்தோம். எனவே, அப்படி நிதி கிடைக்கின்றபோது இப்படிப்பட்ட பாலங்களையும், தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே இருக்கின்ற முக்கிய பாலங்களையும் எடுத்துக்கொள்வதோடு, சாலைகளையும் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உலக வங்கியின் நிதி—தமிழகத்தினுடைய சாலைகளை மேம்பாடு செய்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தீவிர முயற்சியின் காரணமாக தற்சமயம் அந்த நிதி — பெறப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிதியினைக்கொண்டு ஏற்கெனவே திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆற்காட்டிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் 732 கிலோ மீட்டர் சாலைகளும் அதன் உட்புறம் இருக்கின்ற 13 புறவழிச் சாலைகளும் மற்றும் தமிழகத்தின் பலவேறு பகுதிகளில் இருக்கின்ற 2600 கிலோ மீட்டர் சாலைகளை தரம் உயர்த்தி மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே திட்டங்கள் தீட்டப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகள்தான்

எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *382*, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

382—

திருமண மண்டபம்

***35853— திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியின் மையப் பகுதியில் பழனி தண்டாயுதபாணிசாமி தேவஸ்தானத்திற்குரிய நிலத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கொமரலிங்கம் பேரூராட்சி பகுதியில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 2925 சதுர அடி மனை உள்ளது. இதில் திருமண மண்டபம் கட்ட போதுமான இடவசதி இருக்குமா? முதலீடு செய்யப்படும் தொகைக்கு உரிய வருவாய் கிடைக்குமா என்பதைப் பரிசீலித்து திருமண மண்டபம் கட்டுவது குறித்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள், என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள கொமரலிங்கம் பேரூராட்சி என்பது 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு